விலை ரூபா 1:25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1959 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 மார்கழி 6 ரபி. அவ் 15 இதழ் 309
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-12-83

## தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண விளையும்
# அடுத்த மாநாட்டுக்கான விபரம் இன்று வெளியாகும்

(கொழும்பு)

தமிழ்மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணும் யோசனைகள் குறித்து ஆராயும் அனைத்துக்கட்சி வட்டமேசை மகாநாட்டுக்கான ஆலோசனை மாநாடு இன்று மாலை அமைச்சரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8ம் பக்கம் பார்க்க)

# மட்டு. நகரில் சூருவளி அபாயம்!

# வடக்கு நோக்கியும் நகரலாம்!!

## மீட்புப் பணிகளுக்காக பொலிஸார் தயார் நிலையில்

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து காங்கேசன்துறை வரையிலான கரையோரப் பகுதிகளை சூருவளி தாக்கும் அபாயம் இருப்பதாக கொழும்பு வானிலை அவதான நிலையம் நேற்றிரவு எச்சரித்துள்ளது,

மட்டக்களப்புக்கு கிழக்கே தோன்றியுள்ள தாழ் அமுக்கம் காரணமாக மட்டக்களப்பு பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதைத் தொடர்ந்து மீனவர்களை கடலுக்கு செல்லவேண்டாம் என்றும் சகல பொலிஸ் நிலையங்களையும் தொண்டர் ஸ்தாபனங்களையும் தயார் நிலையில் இருக்குமாறும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து கேட்டுள்ளார்.

மட்டக்களப்புக்கு கிழக்கே சுமார் 300 மைல் தொலைவில் தோன்றியுள்ள தாழ் அமுக்கம் மேற்கு நோக்கி நகர்ந்து இன்று மட்டக்களப்பு கரையை அடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தாழ்அமுக்கம் (8-ம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி: தாழ் அமுக்கம்
# சூருவளியாக மாறியது!

(கொழும்பு)

இன்று அதிகாலை கிடைத்த செய்திகளின்படி தாழ் அமுக்கம் சூருவளியாக மாறிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை சுமார் 9 மணியளவில் கரையை சூருவளி வந்தடையும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நிலைபற்றி எமது மட்டக்களப்பு நிருபர் இரா. துரைரத்தினம் தகவல் தருகையில் ''நேற்று மாலையிலிருந்து பலத்த காற்றுடன் கூடிய மழை இன்று அதிகாலை ஓய்ந்து தற்போது அமைதி நிலவுவதாகவும், மட்டக்ளப்பை முன்னர் தாக்கிய சூருவளி தாக்கியபோதும் இதே போன்றே காணப்பட்டதாகவும் தெரிவித்தார். மக்கள் பீதியுடன் நடமாட்டமின்றி இருப்பதாகவும் கூறினர். (கு

## கைதான 2 காவல்துறையினர்:
## அடையாள அணிவகுப்பு
# 23ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

லஞ்சம் வாங்கியதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட காவல்துறையைச் சேர்ந்த இருவர் மீதான அடையாள அணிவகுப்பு, முதலாம் சாட்சி வராததால் இம்மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இரு நபர்களிடமிருந்து 20 ஆயிரம் ரூபாவை இரு காவல் துறையினர் பெற்றதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார், காவல் துறையைச் சேர்ந்த அந்த இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர்களிருவரையும் றிமாண்டில் வைக்குமாறும் 20-ம் திகதி அடையாள அணி வகுப்புக்குட்படுத்து மாறும் உத்தரவிட்டிருந்தார்.

நேற்று முதலாவது சாட்சி சமூகமளிக்காததால் இம் மாதம் 23-ம் திகதி அடையாள அணிவகுப்பு நடாத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (மா)

# ஜி. ஸி. ஈ. பரீட்சை:
## அசம்பாவிதம் இல்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் க.பொ.த. (ஜி.ஸி.ஈ.)சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களில் மணித்தியாலத்திற்கொரு தடவை பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

க.பொ.த. பரீட்சைநேற்று இலங்கைபூராவும் ஆரம்பமாகியது தெரிந்ததே.

கடந்த காலங்களில் நடைபெற்றதுபோலப் பரீட்சை மண்டபங்களுக்குள் இம்முறை பொலிஸ் - இராணுவ பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பரீட்சை ஆரம்பமான நேற்று பரீட்சை நடைபெறும் நிலையங்களில் எதுவித அசம்பாவிதங்களும் நிகழவில்லையென்றும், பரீட்சார்த்திகள் ஒழுங்காகப் பரீட்சை எழுதியதைத் தாம் அவதானிக்கக்கூடியதாக இருந்ததென்றும் அதிகாரி மேலும் தெரிவித்தார். (மா)

## 'ஈழம்' பற்றி ஜனாதிபதிக்கு எழுந்தசந்தேகம்

(அனுராதபுரம்)

''இலங்கைக்கு ஈழம் எனும் பெயர் எப்படி வந்தது?

இப்படி வினா எழுப்பி தனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டார். ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன

ஜனாதிபதி நேற்று முன் தினம் அனுராதபுரம். (8ம் பக்கம் பார்க்க)

# பஸ்சேவை ரத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இச்சேவை நேற்று முதல் மாலை ஆறு மணியுடன் நிறுத்தப்படும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை வரை நடந்து வந்த பஸ் சேவை மாலை 6 மணிவரை குறைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே பஸ் சேவை நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ]க]

## அகதிகள் முகாம் சிறுமி விற்பனை விவகாரம்:
# சிறுமியை ஒப்படைக்குமாறு உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள முகாமொன்றிலிருந்து விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சிறுமியை உடனடியாகத் திரும்பவும் பெற்றோரிடம் ஒப்படைக்கும்படி யாழ் அரச அதிபர் திரு தேவநேசன் நேசையா உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகள் முகாமிலிருந்து மாத்தளையைச் சேர்ந்த எட்டுப் பிள்ளைகளின் தாயாரிடம் அவரின் 2வது பெண்பிள்ளையை (வயது ஒன்பது) மட்டக்களப்பைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரின் உறவினருக்கு முகாமிலுள்ள ஒருஊழியர் தரகராக நின்று 300 ரூபாவுக்கு விற்பனை செய்ததாகவும் இதில் 100ரூபா மட்டும் தந்தையிடம் கொடுத்துவிட்டு மீதியை அவர் எடுத்துக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இதனை அறிந்து கொண்ட சில அகதிகளும் அங்கு கடமையாற்றும் சில தொண்டர்களும் நல்லூரிலுள்ள வீடொன்றிவி (8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஜப்பானில் இருந்து மறுசீர மைக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட ரோசா 6 சிலிண்டர் மினி பஸ் என்ஜின், கியர் வொக்சுடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் C 70, C 90, CD 125, CX 500 விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஆர். கே. அன். சன்ஸ், 129, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம், T. P. No: 24029 (10608)

கோழிகுஞ்சு பொரிக்கும் (Incubator) இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. சிவகுமாரன், எஸ். எஸ். கிறைண்டிங் மில் பாம், மூளாய் தெற்கு சுழிபுரம். 10635

எழுதுமட்டுவாள் கிளாலி ரோட்டில் 10 ஏக்கர் தென்னந் தோட்டம் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கவுரி F போறேஸ் ஸ்ரோர், இல 5, நவீனசந்தை, யாழ்ப்பாணம். 10644

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (10252)

சுன்னாகத்தில் K K.S. வீதியில் ஆச்சிரமத்திற்கு அருகாமையில் 2பரப்பு 2 குளி காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி P. நடராசா, முகாந்திரம் லேன், மல்லாகம். 10656

கல்வியங்காடு புதுசெம்மணி வீதியில் நாலு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) விபரங்களுக்கு: 92, ருத்தித் துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10672

1ம் நம்பர் கல்லர் 15 H. P. மோட்டர் பான் பெட்டி, உமி அடுப்பு ஸ்ராட்டர், மெயின் சுவிச் மொத்தமாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சு. வையாபுரி, உப்புமில், மயிலிட்டி. 10673

நான்கு அறைகள் கொண்ட வீடு ஒன்று சகலவசதிகளுடன் விற்பனைக்குண்டு 10/7, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி 10613

யாழ்ப்பாணம் பீச் ரோட்டில் ஐஸ் பேக்டரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: டி பி ஜே. ஜான்ஸன், 171, குருசோ வீதி, சுண்டிக்குளி. 10553

## தேவை

4 பரப்பில் வீடு அல்லது வீடு கட்டுவதற்கு காணி வடமாகாணத்தில் வீதியோரத்தில் தேவை, ராசவீதியில் விரும்பத்தக்கது. இம்பீரியல் றவல், 51, 1ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11. 10666

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் சின்னக் கடைக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வியாபாரம் செய்யத்தக்க பெரிய ஸ்தாபனம் வாடகைக்குண்டு. ச. துரைரத்தினம், 50, பாரதி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (10633)

## சேவை

நத்தாரையும், புதுவருடத்தையும் முன்னிட்டு சகலவிதமான கேக் வகைகள் X'MAS CAKE, YULE LOG, CHOCOLATE CAKE, FRUIT CAKE மற்றும் பலவிதமான கேக் வகைகள் ருசியானதாகவும், தரமானதாகவும் தயாரித்துக் கொடுக்கப்படும். ஓடர்கள் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விம்ஸ், 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 10629

எமது ஸ்ரூடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். 10509

### புங்குடுதீவு – நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்

## விற்பனை

எம்மிடம் கீழ்த்தரப்பட்டுள்ள பொருட்கள் கேள்விப் பத்திரமூலம் விற்பனை செய்ய இருக்கின்றது. விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்று 30-12-83ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு - நயினாதீவு பல நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என விலாசமிடப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

என்பலப்பின் இடதுபக்க மேல் மூலையில் "கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பொருட்களின் விபரம்:

1. சுவீப்பிங் மா.
2. சுவீப்பிங் சீனி.
3. பாவிக்கப்பட்ட மரங்கள்.
4. பாவிக்கப்பட்ட லொறி ரயர்.
5. பாவிக்கப்பட்ட லொறி ரியூப்.
6. பாவிக்கப்பட்ட லொறி உதிரிப்பாகங்கள்.
7. பீடிப்பெட்டிகள்.

பொதுமுகாமையாளர்,
புங்-நயி பல.நோ.கூ. சங்கம்,
புங்குடுதீவு

புங்குடுதீவு,
16-12-83

10674

## தகுதிகாண் பரீட்சை

(சாவகச்சேரி)

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்ட விசேட சேவை உத்தியோகத்தர்களின் பதவிகளை நிரந்தரமாக்கும் பொருட்டு அவர்களுக்கான தகுதிகாண் பரீட்சையை நடாத்துவதற்கு திட்ட அமுலாக்கல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. வெ)

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 6-ந்திகதி
புதன்கிழமை
21-12-83

**மேடம்:** மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும் குறிப்பால் அரசியல் வாதிகளுக்கு புகழ் குவியும் வரவு பெரும்.

**இடபம்:** அவசரம் வேண்டாம் ஆயுத பீடைக்கு இடமுண்டு. நின்று நிதானித்து செயலாற்றினால் அமைதி உன் காலடியில் வந்து சேரும்.

**மிதுனம்:** சிறு விடயத்திற்கு கூட அதிக ஆத்திரப் படுவீர்கள். வீணன சந்தேகங்களும் தோன்றலாம் எதையும் சிந்தித்தபின் செயலாற்றவும்,

**கடகம்:** அரசியல் வாதிகளுக்கு இன்று சிறப்பான தினம். பிறருக்கு உதவுவதற்கு முன்னிற்பீர்கள். வசீகரப் பேச்சினால் மற்றவர்களை உங்கள் பக்கம் இழுத்துக் கொள்வீர்கள்.

**சிங்கம்:** எதிலும் அவசரக் கோலம் தென்படும். துரிதகெதியில் செயலாற்ற முனைந்து தோல்வியை முத்தமிடலாம். சகோதர வழியால் சஞ்சலமான செய்தி கிடைக்கும்.

**கன்னி:** மாதுருவழிப் பெருமைக்கு இடமுண்டு. மனம் போல்யாவும் கிடைக்கும். இன்று மாணவர்களாயின் கல்வியில் சிறப்பும் குடும்பத்தில் உறவினர் கொண்டாட்டமுண்டு,

**துலாம்:** கற்றதால் பயன் கைமேல் கிடைக்கும் கலைஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் தொழில் புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும்.

**விருட்சிகம்:** ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் எதிலும் விரகத்தி மனப்பான்மை தென்படும். வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களை பகைத்துக்கொள்வீர்கள்.

**தனுசு;** வாழ்க்கையில் தென்றல் வீசும். பெரியவர் ஒருவரின் உதவியும் கிடைக்கலாம் புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு' தெய்வத்தின் துணையுமுண்டு.

**மகரம்;** ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் மாட்டிவைக்கும். பூமிப்பிணக்கால் நஷ்டத்திற்கு இடமுண்டு. சிலர் உஷ்ண ரோகங்களுக்கும் இலக்காகலாம். உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

**கும்பம்:** மனம்போல்வாழ்வு இன்று மலரும். கடமைபுரியும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடமுண்டு,

**மீனம்'** தொழில் பகுதியில் உரிய வாய்ப்புகள் கிடைக்கலாம். எதிர்பாராத இடத்தில் இருந்து அழைப்பிதல் கிடைப்பதற்கான சந்தர்பம் ஒன்றும் உண்டு சிலருக்கு திடீர் லாபங்களும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

---

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

**பௌதிக இரசாயனம்**
ஆசிரியர் திரு. க. இளவழகனர்
A/L 84 and 85
ஆரம்பம்: 23-12-83 காலை 10-00 மணி
விபரங்கட்கு: நிர்வாகி (10676)

---

**யாழ் மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**
உங்கள் குளிர்சாதனப்பெட்டிகள், குளிரூட்டிகள் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் உங்கள் இல்லத்தில் அல்லது எங்கள் வேலை ஸ்தலத்திற்கு கொண்டுசென்று கைதேர்ந்த வல்லுனர்களால்
**பழுதுபார்ப்பதற்கும்**
குளிர்சாதனப்பெட்டி பழுதுபார்ப்பதற்குத் தேவையான சிறந்த உதிரிப்பாகங்கள் வேண்டிய அளவு பெற்றுக்கொள்வதற்கும்
நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்:

**லீலா என்ஜினியரிங் வேக்ஸ்**
இல. 147, கே. கே. எஸ். வீதி,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
தொலைபேசி: மாவிட்டபுரம்: 3
தலைமை அலுவலகம்;
இல. 400, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை,
கொழும்பு 13. தொலைபேசி: 25933
(10632)

---

**6-ம் மாத நினைவஞ்சலி**
வெலிக்கடைச் சிறைச்சாலையில் உயிர்நீத்த
**சிவநாதர் நீதிராஜா**
(தொலைபேசிப்பகுதி தொழில்நுட்பவியலாளர்)

பிறப்பு: 6-10-1956
அழிப்பு: 27-07-1983

என்றும் உன் நினைவாக
உற்றூர், உறவினர்,
நண்பர்கள்.



அந்தியேட்டிக் கிரியை
21 - 12 - 1983
(10654)

---

# முக்கிய அவித்தல்

கொழும்பு மருந்து ஸ்தாபனமொன்றின் பிரதிநிதி எனச் சொல்லிக்கொண்டு எமது ஸ்தாபனத்தின் பெயரையும் பயன்படுத்தி சிலர் மருந்துவகைகள் விற்பனை செய்துவருவது எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆசை வார்த்தைகள் மூலம் மருந்து வகைகள் விற்பனை செய்வதற்கு உரிமையற்றவர்கள் இவர்களால் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். எமக்கும் அவ்வித மருந்து விற்பனைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதுடன் பொய்யர்களிடம் யாரும் ஏமாந்துவிடவேண்டாமென்றும் இத்தால் கேட்டுக்கொள்கின்றோம்.

**சின்னத்துரை & பிறதர்ஸ்**
39, கே. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(10670)

---

அரிவுஆலை உரிமையாளர்க்கோர் நற்செய்தி!
இதோ வந்துவிட்டது!

இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்த.....
**WHEEL BRAND CIRCULAR SAW**
( சக்கர மார்க் வட்ட வாள் )
**42" X 10 G    42" X 9 G**
உங்கள் தேவைக்கு முந்துங்கள்.....

**கல்கிசன்ஸ்**
147, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23711
(10671)

திரிப்பொலியில் பாலஸ்தீனர் மீது தாக்குதல்:

# இஸ்ரேலிய கடற்படைக்கு அமெரிக்கா எச்சரிக்கை!

## நேற்றைய தாக்குதலில் சரக்குக்கப்பல் மூழ்கடிப்பு!

பெய்ரூட், டிச, 20

லெபனானிலிருந்து வெளியேறவுள்ள பாலஸ்தீன வீரர்களுக்கு இடையூறு அளிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று இஸ்ரேலிய கடற்படைக்கு அமெரிக்கா எச்சரித்துள்ளது. இந்த எச்சரிக்கையை ரெல்அவிவ் நகருக்கு அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் லெபனானிலிருந்து வெளியேறவுள்ள பாலஸ்தீனர்களை இஸ்ரேலிய கடற்படை தடுத்துவருவது குறித்து ஆத்திரமடைந்துள்ளதையே இந்த எச்சரிக்கை தெளிவாகக் காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தினமும் இஸ்ரேலிய கடற்படை திரிப்போலியில் உள்ள பாலஸ்தீன விடுதலை வீரர்களின் இலக்குகளைத் தாக்கியது. இதனால் திரிப்போலி துறைமுகத்தில் நங்கூரமிட்டுநின்ற கிரேக்க சரக்குக் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டது. நேற்று 24மணி நேரத்தில் இருதடவைகள் நீண்ட நேரமாக இஸ்ரேலிய கடற்படைத் தாக்குதல் நிகழ்ந்தது.

இதேவேளை பாலஸ்தீன இயக்கத்திலுள்ள அரபாத் விசுவாசிகளை ஏற்றிச்செல்ல ஐந்து கிரேக்க கப்பல்கள் திரிப்போலி அடைந்துள்ளன. இவை தமக்குப் பூரணபாதுகாப்புத்தருப்படி தொடர்ந்தும் கோரிவருகின்றன. இக்கப்பல்கள் கிரேக்க தனியார் சரக்கு கப்பல்களாகும். இவற்றில் ஐ. நா. கொடிபறக்கவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பளிக்கும்படி இக்கப்பல்கள் கேட்டுள்ளதை யடுத்து பிரெஞ்சு விமானந்தாங்கி கப்பலொன்று உட்பட வேறு சில பிரெஞ்சு போர்க்கப்பல்கள் இவற்றுக்கு பாதுகாப்பளிக்க முன்வந்துள்ளன. சில அமெரிக்க போர்க்கப்பல்களும் இப் பிரெஞ்சுபோர்க் கப்பல்களுடன்இணைந்துகொள்ளும்என எதிர்பார்க்கப்படுகிறது.

பாலஸ்தீன வீரர்கள் திரிப்போலியிலிருந்தும் வெளியேற முன்னர் தமது கனரக ஆயுதங்களை லெபனானில் கைவிட்டுச்செல்லவுள்ளனர். இக்கனரக ஆயுதங்களை அவர்கள் லெபனான் இராணுவத்துக்கு கையளிப்பர் என்று கூறப்பட்டது.

சிறு ஆயுதங்களை மட்டுமே அவர்கள் தம்முடன்கொண்டு செல்லவுள்ளனர்.

லெபனானிலிருந்து சைப்பிரஸ் சென்ற காயம்பட்ட முதல்தொகுதி பாலஸ்தீன வீரர்கள் அங்கிருந்தும் நேற்று முன்தினம் எகிப்து போய்ச் சேர்ந்தனர். எகிப்தின் ஹேர்குலிஸ்' போக்குவரத்துவிமானமொன்று அவர்களை ஏற்றிக்கொண்டு கெய்ரோவந்தடைந்தது. தலைவர் யாஸீர் அரபாத்தின் சகோதரிஒருவர் அவ்வீரர்களை விமான தளத்தில் வரவேற்றார். (கி)

'நாஸா' வின் புதிய ஆண்டு:

## 10 பயணங்களில் 84 பேரை விண்வெளிக்கு அனுப்பத்தீர்மானம்!

ஹூஸ்டன், டிச. 20

புதிய ஆண்டான 1984ல் பத்து விண்வெளி விமானங்களையும், 84 விண்வெளி வீரர்களையும் விண்வெளிக்கு அனுப்ப அமெரிக்காவின் 'நஸா' நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இப்பத்துப்பயணங்களின் போதும் ஒரு டசினுக்குமதிகமான செய்மதிகளை விண்வெளியில் விடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1984ம் ஆண்டு விண்வெளி விமானப்பயணங்களில் ஆறு பெண்களுக்கும் சந்தர்ப்பமளிக்கப்படும். அத்துடன் விசேட பட்டிகளின் உதவியுடன் விண்வெளியில் வீரர்கள் சஞ்சரிக்கவும் வசதிகள் செய்யப்படும்.

புதிய ஆண்டு விண்வெளிப் பயணத்தில் மூன்று ஜோடி கணவன் மனைவிமார் செல்லவுள்ளனர். ஆனால் இவர்கள் ஒன்றாக பயணம் செய்யமாட்டார்கள். வெவ்வேறாகவே அனுப்பப்படுவர். ஏற்கனவே விண்வெளி சென்றுவந்த அனுபவமிக்க விண்வெளிவீரர்களுக்கும் புதியபயணங்களில் கூடுதல் சந்தர்ப்பமளிக்கப்படவிருக்கின்றது.

இப்பயணங்களின் சிறப்பம்சமென்னவெனில் அடுத்த ஆண்டுமுதல் வர்த்தக ரீதியாகவே விண்வெளி பயணங்கள் ஆரம்பமாகின்றன. இப்பயணங்களில் ஆபத்தில்லை என்றும் பத்தாயிரத்தில் ஒன்றாகவே ஆபத்து இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# ஐந்துக்கு மேற்பட்டோர் ஆயுதபயிற்சிபெறத் தடை!

## மீறுவோருக்கு சிறையும், அபராதமும் தமிழ்நாட்டில் உடன் அமுலுக்கு வருகிறது

சென்னை, டிச. 20

தமிழ்நாடு மாநிலத்தில் ஐந்துக்கு மேற்பட்டவர்கள் ஆயுதப்பயிற்சி. மற்றும் இராணுவ ரீதியான பயிற்சிகளைப்பெற தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கும் புதிய சட்டமொன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது.

இனவாதம், வகுப்புவாதம் போன்றவற்றை தூண்டும் பாடல்கள், சுவரொட்டிகள், பிரசுரங்களைத் தயாரிக்க, விநியோகிக்க. பாவிக்கவும் இப்புதிய சட்டத்தின் கீழ் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நாட்டுஒற்றுமையைக் குலைக்கும்வகையிலும், இனப்பிரச்சினைகளைத் தூண்டிவிடும் நோக்கத்திலும் பல தீவிரவாத சக்திகள் இந்தியாவில் செயல்பட்டு வருகின்றன என்று இந்தியஅரசும், தமிழ்நாடு மாநில அரசும் அறிந்துள்ளன. இதனையடுத்தே மேற்கண்ட தடைகளை அவை விதித்துள்ளன. இத்தடைகள் நேற்று முதல் தமிழகத்தில் அமுலுக்குவந்தன.

இவற்றை மீறுவோருக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனையும், இரண்டாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)


# விவசாயிகளே!

உங்கள் பயிர்களை இலை அரிப்புழு, தண்டுத்தத்தி திரிப்ஸ், கனி ஈக்கள், பழ ஈக்கள், தண்டுத் துளைப்பான், இலைச்சுருட்டி போன்றவை நாசமாக்காவண்ணம் பாவியுங்கள்

# "லெபைசிட் EC 50%"

(விலை 100 மி. லீ.—30 ரூபா, 200 மி. லீ.—58 ரூபா, 450 மி. லீ.—105 ரூபா)

இது ஒரு 'பாயர்' தயாரிப்பு

# ஹேகெம்லிமிட்டெட்

400, டீன்ஸ் ரேட், கொழும்பு-10

உங்கள் விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜென்ஸீஸ், பலாலி ரேட், யாழ்ப்பாணம்

'பாயர்' அக்ரோ கெமிக்கல்ஸ், கிளிநொச்சி

குளோப் ரேடர்ஸ், வவுனியா

M. K. M. அக்பார், அயின் தியேட்டர், மன்னர்


## பாடசாலை மாணவரிடையே போதைவஸ்து பாவனை!

### இந்திய கல்வி அமைச்சர் கவலை

புதுடில்லி டிச. 20.

போதை வஸ்துக்கள், மற்றும் வில்லைகளின் பாவனை பாடசாலை மாணவரிடையே அதிகரித்துவருவதுகுறித்து இந்தியக் கல்வியமைச்சர் திருமதி ஷீலா கௌல் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இக்கவலையை வெளியிட்டார். திருமதி கௌல், இவ்வாறு மாணவர்கள் தமது வாழ்வைச் சூனியமாக்கும் பழக்கவழக்கங்களைப் பழகிக்கொள்வதிலிருந்து பாதுகாக்கப்படவேண்டுமென வலியுறுத்தினர்.

அத்துடன் இதுகுறித்துச்சகல பாடசாலை மட்டங்களிலும் உரியநடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்

மாணவர்கள் இத்தகைய கெட்ட பழக்கவழக்கங்களில் நாட்டங் கொள்வதைத் தவிர்க்க, அவர்களுக்கு வேறு பயனுள்ள அம்சங்களில் நாட்டங்களை ஏற்படுத்தவேண்டுமெனவும் திருமதி ஷீலா கௌல் கேட்டுக்கொண்டார். (கி)

வவனியாவில் கடத்தப்பட்ட

## பெண் பருத்தித்துறையில் மீட்கப்பட்டார்!

(புலோலி)

வவனியா பொலிஸ் பகுதியைச் சேர்ந்த புதுக்குளத்திலிருந்து கடத்திச்செல்லப்பட்ட இளம்பெண் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த அம்பனில் வைத்து பருத்தித்துறைப் பொலிசாரினால் மீட்கப்பட்டார்.

புதுக்குளத்தைச் சேர்ந்த கார்த்திகேசு என்பவர் தனது மகளான இருபத்துமூன்று வயது நிரம்பிய இளம் பெண்ணைக் கடத்திச்சென்று விட்டதாகவும், அவரை மீட்டுத்தருமாறு வவனியாப் பொலிசில் புகார்செய்திருந்தார்.

பருத்தித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து ஆர். ஸ்ரீபழனிவேல், எஸ். சின்னத்தம்பி, கே நவராசா ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி அம்பனுக்குச் சென்று அங்குள்ள வீடொன்றில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட இளம் பெண்ணை மீட்டனர். ஆனால் அவரைக் கடத்திச் சென்றதாகக் கருதப்படும் வாலியர் தலைமறைவாகிவிட்டாராம்.

மீட்கப்பட்ட பெண் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியினால் வைத்திய பரிசோதனைக்குட் படுத்தப்பட்டார்.

இப்பெண் தற்போது வவனியாப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## மணிவாக்கு

பத்திமையும் பரிசும் இலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தம்எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே
—திருவாசகம்

# நமது நோக்கு

## சைவமும் பௌத்தமும்

'சாதியினும் சீலமே சிறந்தது; குலத்திலும் குணமே உயர்ந்தது' என்னும் உண்மை சைவசித்தாந்தத்தின் அடிப்படை உண்மை என்பதை நந்தனார் சரித்திரம் வற்புறுத்துகிறது.

புலையர் குலத்தில் பிறந்த நந்தனார் புனிதமான தில்லையம்பதியில் சிவகதியடைந்தாரென்பது சைவர்களுக்குத் தெரிந்த சரித்திரம்.

இன்று சைவ உலகம் கொண்டாடும் மார்கழித் திருவாதிரைவிழா நந்தன் பெருமையை நன்கு விளக்குகின்றது.

சைவத் திருமுறைகளிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் சாதிகுலம் பிறப்புக்கு எவ்வித பிரத்தியேக உரிமையும் கூறப்படவில்லை எக்குலத்தவராயினும் பக்குவப்பட்ட ஆன்மாக்களே பரகதி அடைவரென்று சைவசித்தாந்தம் பறையறைகின்றது.

இலங்கை வாழ் சைவமக்கள் அநுட்டிக்கும் சமய நெறி சைவசித்தாந்தம். சைவசமயத்தின் முடிவுகளைச் சைவசித்தாந்தம்என்பர். மார்கழித் திருவெம்பாவை காலத்தில் யாழ்ப்பாணம் இந்த அநுட்டானத்துக்கு ஒரு பெரும் எடுத்துக்காட்டு.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பது சைவசித்தாந்தம்; இன்றைய விஞ்ஞானம் கூறும் அணுசக்திக்கு இது எவ்வகையிலும் முரண்பட்டதல்ல.

இத்தகைய சிறந்த நெறி பற்றிய ஆழ்ந்த அறிவும் ஆராய்ச்சியும் இந்நாட்டில் வாழும் சைவர்களுக்குமட்டுமல்ல மற்றெல்லாச் சமயத்தவர்களுக்கும் வேண்டத்தக்கது.

இந்த அவசியத்தை உணர்ந்த பெரியார்கள் சிலர் யாழ். பல்கலைக்கழகத்தில் பூரணமான ஒரு சைவசித்தாந்தத் துறையை அமைப்பது பற்றி அண்மையில் கூட்டம் கூடி ஆலோசித்தனர்.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கித் தெரிவித்த தகவல் இங்குள்ள சைவ வள்ளல்களுக்கும் மற்றும் பெரியோருக்கும் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும்.

இத்துறையை நிறுவுவதற்கு முதல் நன்கொடையாக மூன்று இலட்சம் ரூபாவை வழங்கினவர் ஒரு ஆசிரியர்; ஆசிரியத்தொழிலில் இவ்வித பெருந்தேட்டம் எங்ஙனமென நினைப்பவர் இன்றைய 'டியூஷன்' உழைப்போவென்றும் சந்தேகிக்கலாம், அதுமடமை. முரண்பட்டவாதம்.

இந்த நன்கொடை வழங்கிய வள்ளல் சைவசித்தாந்த வித்தகர் திரு. வ. நடராசாதான் ஒருகமக்காரனென்று கொள்வதில் பெருமையடைபவர். உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை என்ற ஔவவைப் பிராட்டியின் இலட்சியத்தில் இந்த முதிய வயதிலும் வாழ்ந்துகொண்டிருப்பவர்; கமமே சைவப் பயிர்வளர்க்க வல்லது.

சைவசித்தாந்த ஆராய்ச்சியும் படிப்பும் யாழ்ப்பாணத்தவர்க்குப் புதியதல்ல? ஆனால் அதன் பழமையே இன்றைய வாழ்க்கை நிலைக்கு ஒவ்வாததென்ற பொதுநம்பிக்கை யாழ்ப்பாண இளந்தலைமுறையைப் பீடித்திருக்கிறது; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதென்பதை விளக்கவேண்டும்.

உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இவ்வித சமய, தத்துவ ஆராய்ச்சிப் பட்டமோ படிப்போ என்ன உத்தியோகத்துக்கு உதவும்? எதிலும் மனிதன் தெய்வீக ஆளுமை அடையலாமென்பதை விளக்க உதவும்.

தொழில்நுட்ப நவீன நாகரிக வாழ்வில் இவ்வித சந்தேகம் இயற்கை. ஆனால் எம்மையறியாமலே நாம் வாழும் இயற்கை வாழ்வு சைவசித்தாந்தத்தில் அமைந்துள்ளது; அதனை ஆராய்ந்தறிவது அவசியம்.

எவ்வாறு எமது உடம்பின் ஆழ்ந்த ரகசியங்கள் எமக்குத்தெரியாதபோதும், அதன் அடிப்படை இயக்கம் எமது உள்ளுணர்வில் இடம் பெறுகிறதோ அவ்வாறே சைவமக்களுக்கு, சைவசித்தாந்தம் இயற்கை அறிவாக உயிருடன் கலக்கின்றது.

பௌத்தர்கள் பெரும்பான்மையராய்வாழும்நாட்டில் பௌத்தமத போதனை ஆராய்ச்சி போன்ற விடயங்களுக்கு போதிய வசதிகள் உண்டு. பௌத்த மதத்தை பலப்படுத்த உறுதிகொண்ட அரசு அதற்கு ஆவனசெய்கின்றது.

நாடெங்கிலும் பௌத்தரின் போதனைகள் பரப்புவதற்கு இன்றைய அரசு வருகிற ஆறுவருடங்களில் திட்டமிட்டுச் செயற்பட உறுதி பூண்டுள்ளது.

அதேபோல் சைவர்களும் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த துறையைநிறுவுவதற்கு இன்னும் வேண்டிய ஒன்பது லட்சம்ரூபா நிதி உதவ தயங்கவேண்டியதில்லை. இத்துறை விருத்தியடைய நிதி உதவி முதற் தேவை.

சைவத்துக்கும் பௌத்தத்துக்கும் அடிப்படை போதனைகளில் ஒற்றுமை காண்பதே இன்றைய தேவை: கொல்லாமை சாதிவேறுபாடின்மை இவையிரண்டும் சமயரீதியில் மக்கள் வாழ்க்கையில் பலம் பெறுவதானால் மக்கள் சமுதாயம் இன்றைய இழிவு நிலைமாறி முன்னேற வழி பிறக்கும்.

# "சுற்றம், சூழல் பயன்படும்வகையில் தொழில் முயற்சிகள் அமையவேண்டும்!"

## தொழில் வாய்ப்புகள் பற்றிய கருத்தரங்கில் கருத்து

(மானிப்பாய்)

"யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள ஸ்தாபனங்களில் வேலைசெய்வது; புதிய தொழில் முயற்சிகளை அந்நிய இடங்களில் ஆரம்பிப்பது போன்றவற்றை எம்மவர்கள் தவிர்க்கவேண்டும். எமது சொந்த இடங்களிலேயே சுற்றத்தவருக்கும் சூழலுக்கும் பயன்படும்வகையில் புதிய தொழில்முயற்சிகள் தொடங்கப்படவேண்டும்"

"யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கைத்தொழில் அபிவிருத்தியும், வாய்ப்புகளும் என்ற பொருளில் கடந்த வாரம் யாழ் நவீன சந்தை கட்டிடத்திலுள்ள நிதி, அபிவிருத்தி ஸ்தாபனத்தார் கருத்தரங்கொன்றை நடத்தினர். அதில் தலைமைவகித்துப்பேசிய திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "எமது பிரதேசங்களிலேயே தொழில்முயற்சிகளை உறுதியாக ஆரம்பிக்க போதியளவு நிலவளம், தொழில்நுட்ப வளம், மனித வளம் என்பன உண்டு. எனவே இவற்றைப் பயன்படுத்தி எமது பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும்" என்றார்.

இந்தக் கருத்தரங்கில் உலக வங்கி கைத்தொழில் ஆலோசகர் திரு. அலன் காணிவல்லும் பங்குபற்றினர். அவர் தெரிவித்ததாவது: "சிறு கைத்தொழில்களையும் தகுந்த ஆலோசனைகளுடன் நன்கு விஸ்தரித்து லாபமடையலாம். தொழில் வளங்களை விருத்தி செய்ய விரும்புவோருக்கு தகுந்த ஆலோசனைகளை உலக வங்கி வழங்கும்" என்றார்.

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி ஸ்தாபனக் கிளைத் தலைவர் திரு. சி. கெ. குணநாயகம் கருத்துத்தெரிவிக்கையில், தொழில்முயற்சிகளை ஆரம்பிப்போர் பெறவேண்டிய வங்கிகளின் ஆலோசனைகள், மற்றும் அவற்றுடனான தொடர்புகள் பற்றி விவரித்துக் கூறினர்.

இக் கருத்தரங்கில் தொழில்நுட்ப ஆலோசகர் திரு. வ. கார்த்திகேசு, கைத்தொழில் அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் திரு. ஆர். விசுவலிங்கம் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர். கைத்தொழில்துறை சார்ந்த பல பிரமுகர்கள்இக் கருத்தரங்கில் பெருமளவு கலந்துகொண்டனர். (கி)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய ராஜகோபுரம் பூர்த்தி!

(புலோலி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் சுமார் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் ராஜகோபுர கட்டு வேலைகள் பூர்த்தியாகியுள்ளது. அடுத்த பாதம் இந்த ராஜகோபுரத்திற்கானவர்ணப் பூச்சு வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

தற்போது பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் அழகான வேலைப்பாடுகளுடன் நவீன வசந்தமண்டபம் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றது. இவ்வசந்தமண்டப அமைப்பு வேலைகள், சுற்றுமதில் அமைப்பு வேலைகள், ராஜகோபுர பூச்சுவேலைகள் என்பனவற்றை துரிதகெதியில் பூர்த்தியாக்கி ராஜகோபுர மகாகும்பாபிஷேகத்தை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை ஆலய தர்மகர்த்தா சபை மேற்கொண்டு வருகின்றது.

## தோத்திரத்திரட்டு வெளியீடு

(மாவிட்டபுரம்)

அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் மாதந்தோறும் ஒவ்வொரு தோத்திரத்திரட்டு வெளியிடுவதுடன் அது சம்பந்தமான போட்டி ஒன்றையும் நடத்திவருகின்றனர்.

அளவெட்டிப் பகுதியிலுள்ள 200க்கும் மேற்பட்ட மாணவர்களிடையே நடத்தப்படும் இப்போட்டியில் மாதம் ஒருவருக்குப் பத்து ரூபா பரிசும் வழங்கப்படுகிறது. [வெ[

## "சிறந்த சமுதாயம் உருவாக சமயக் கல்வி முக்கியமானது"

### பரிசளிப்பு விழாவில் முன்னாள் யாழ். அபி. சபைத் தலைவர்

(மாவிட்டபுரம்)

"இன்று சிறந்த சமுதாயமொன்றை நாம் உருவாக்க வேண்டுமானால் கல்வித்திட்டத்தில் சமயக்கல்வி முக்கிய இடத்தைப் பெறவேண்டும். சமயப்பற்றுள்ள மாணவிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராம்நாதன் கல்லூரியின் சேவை பாராட்டப்பட வேண்டியது"

இவ்வாறு முன்னாள் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எஸ், நடராசா மருதனமடம் இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

கல்லூரி அதிபர் திருமதி பு. சச்சிதானந்தன் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றினர்.

திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எமது பெண்கள் சமயப் பற்றுள்ளவர்களாகவும், நல்ல பண்புள்ளவர்களாகவும் இருந்தால்தான் சமுதாயம் சிறப்புறும் என்ற உயரிய நோக்கத்தை மனதில் கொண்டுதான் இக்கல்லூரியை சேர். பொன். இராமநாதன் அமைத்தார். அவர் இக்கல்லூரியை அமைத்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

"அவரின் உயரிய நோக்கத்தை நிறைவேற்றும் பணியில் இக்கல்லூரி மட்டுமல்லாது இப்பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் ஈடுபடவேண்டும். அப்போதுதான் நல்ல சமயப்பற்றுள்ள, பண்புள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்கமுடியும்" என்றார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை, "இக்கல்லூரியில் நிலவும் குறைபாடுகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். (வெ)

# மக்கள் கருத்து

## இணுவில் தெற்கில் வாசிகசாலை இல்லாதகுறை

மக்கள் அன்றாட செய்திகளை அறிந்துகொள்வதற்கு ஏற்ற கருவிகளுள் வாசிகசாலைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தனித்தனியாக செய்தி பரப்பும் சாதனங்களை பெற்றுப் பயன்படுத்த முடியாத மக்களுக்கு இவ்வாசிகசாலைகள் பெரிதும் உதவுகின்றன.

இணுவில் தெற்கு கிராமம் மேற்குறித்தவாறு வாசிகசாலை ஒன்றை பெற்றிராத துர்பாக்கிய நிலையில் உள்ளது. இதனால் மாணவர்களும் பொது மக்களும் ஏனையோரும் தமக்குத் தேவையான அவசிய செய்திகளை அறிந்துகொள்ள சிரமம்படுவதோடு சிறந்த முறையில் மொழுதுபோக்கு நேரத்தைக் கழிக்க முடியாமலும் உள்ளது. இவ்விடயம் தொடர்பாக கிராமோதய சபையும், நலன்விரும்பிகளும் கவனம் செலுத்தி இணுவில் தெற்கு மக்களின் வாசிகசாலையில்லாக்குறையைதீர்த்து வைப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

ஞா. திருக்கேஸ்வரன்,
இணுவில்.

## வவனியாவில் திருவெம்பாவை பூஜை

வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தினர் இம்முறை மிகவும் சிறப்பாக திருவெம்பாவை பூஜையினைத் தினமும் நடத்திவருகின்றனர்.

அதிகாலையிலேயே பூஜை நடைபெறுகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை மேற்படி மன்றச் செயலாளர் திரு. என். செல்லையா மிகவும் சிறப்பான முறையில் செய்துவருகின்றார்.

## தொல்புரத்தில் திருவெம்பாவை வீதிப்பஜனை

(புலோலி)

திருவெம்பாவையை முன்னிட்டுத் தொல்புரம் மத்திய சன சமூக நிலைய வாசிகசாலையின் பஜனைக்குழுவினர் அதிகாலை வீதிப் பஜனையை ஆரம்பித்து உள்ளனர்.

தொல்புரம் மத்தி கொட்டடிப்பதி ஸ்ரீஆதிமுத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் இருந்து தினமும் அதிகாலை நான்கு மணிக்குப்புறப்படும் இவ்வீதிப் பஜனைக்குழுவினர் சகல வீதிகள் வழியாகத் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிக்கொண்டு செல்லுவர்.

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யோகி ராஜ்ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தாவின் ஜெயந்தி விழாவும், சிவானந்த சிறுவர் சமயப் பாடசாலை ஆண்டு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை யாழ். திவ்ய ஜீவனசங்கமண்டபத்தில் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக திருமதி சண்முகரத்தினம் கலந்துகொள்வார். மங்கள விளக்கேற்றல், திருவிளக்குப் பூஜை, ஆசியுரைகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (வெ)

# 'கிழக்குமாகாணமுஸ்லிம்கள் அரசியல் அநாதைகள்!'

## மூதூர் மஜீத் கண்டனம்

[திருகோணமலை]

இலங்கை வரலாற்றில் முஸ்லிம் மக்களுக்கான பூரண சுதந்திரமான பிரதிநிதித்துவம் கிழக்கு மாகாணத்திலிருந்தே உதயமாகும் நிலைமையை நாம் உருவாக்கவேண்டும்''

மூதூர் முன்னாள் எம். பி. யும் முன்னாள் பிரதியமைச்சருமான ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத் மேற்கண்டவாறு கூறினார்.

கிண்ணியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற கிண்ணியா முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் பொதுக்கூட்டத்தில் ஜனாப் மஜீத் உரையாற்றினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''அண்மையில் நடந்து முடிந்த இனக்கலவரம்பற்றி ஆராய்கையில் எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு நாம் போராட வேண்டியுள்ளோம்.

''இலங்கை முஸ்லிம் மக்கள் தங்கள் பூரண சுதந்திர பிரதிநிதித்துதத்தை கிழக்கு மாகாணத்தில் முதலில் நிலைநாட்ட வேண்டும். இந்த நிலையை நாம் தமிழ் முஸ்லிம் மக்களின் ஐக்கியத்தின் அடிப்படையில் தான் உருவாக்கமுடியும் என்று நான் கருதுகின்றேன். இது சிங்கள மக்களுக்கு மாறுனதாக இருக்கமுடியாது.

இன்று கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் அரசியல் அனாதைகளாக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுடைய அரசியல் வாழ்வில் எந்தவித உயர்பதவிகளையும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் பெறவில்லை.

''1948ல் இருந்து இன்று வரை கிழக்குமாகாண முஸ்லிம்கள் மத்தியில் இருந்து எவரும் ஒரு நிரந்தர அமைச்சராகவோ, வெளிநாட்டுத் தூதுவராகவோ, கூட்டுத்தாபனத் தலைவராகவோ நியமனம்பெறவில்லை'' என்றார்.

## கப்பல் சேவை

(மன்னார்)

காலநிலை சீர்கேடு காரணமாகக் கடந்த அக்டோபர் மாதம் 23ம் திகதி முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் சேவை மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகும்.

கப்பல்சேவை ஆரம்பிக்கப்பட்டதும் பாஸ்போட் வைத்திருக்கும் ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கே கப்பலில் முதலிடம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைமன்னார் துறைமுகத்திலிருந்து புறப்படும் முதலாவது கப்பலில் ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய வம்சாவழித் தமிழ் அகதிகளே பயணம் செய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இளம் பெண் நீதிமன்றத்தில் ஆஜர்

(மட்டுவில்)

வீட்டைவிட்டு ஓடி பனையில்யில் மரக்காலையொன்றில் அடைக்கலம் புகுந்திருந்த இளம்பெண் ஒருவரை சாவகச்சேரிப் பொலிசார் தேடிக்கண்டுபிடித்து, நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதவான் இளம்பெண்ணை 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து பெற்றோருடன் அனுப்பிவைத்தார்.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 20வயது இளம் பெண் ஒருவர் பெற்றோருடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடினார். இவர் பின்னர் பளையிலுள்ள மரக்காலை ஒன்றில் அடைக்கலம் புகுந்தார்.

சாவகச்சேரி பொலிஸ் சார்ஜண்ட் வல்லிபுரம் சூரியப்பிரகாசம் இந்த இளம்பெண்ணை கண்டுபிடித்து நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

அடுத்த தவணைக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

## பெற்ற பிள்ளையைக் கொலை செய்தாராம்!

### நிறைமாதக் கர்ப்பிணி; வழக்கு ஒத்திவைப்பு

(வவனியா)

தான்பெற்ற குழந்தையை நீரோடையில் எறிந்து கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட ஒட்டுசுட்டான் சிசுக் கொலை வழக்கில் எதிரி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த காரணத்தால் விசாரணை அடுத்த ஜனவரி 30-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தனக்குப் பிறந்த நான்கு மாத சிசுவை நீரோடையில் எறிந்து கொலை செய்ததாக ஒட்டுசுட்டானில் வசிக்கும் மலையகத்தைச்சேர்ந்த தெய்வானை மலர் செல்லையா என்ற பெண்ணுக்கு எதிராக குற்றஞ் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு வவனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி கர்ப்பிணியாக இருப்பதினால் மேற்கண்ட திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிரி தரப்பில் சட்டத்தரணி கனகமனோகரன் ஆஜராகி இருந்தார்.

அரச தரப்பில் சட்டத்தரணி சுந்தரம் ஸ்ரீ கந்தராஜா ஏற்பட்டிருந்தார்.

## சுழிபுரம் சுடலையில் உள்ள கஷ்டங்கள்

[சுழிபுரம்]

சுழிபுரம் சம்பில்துறைக்கு அருகாமையாகவுள்ள சுடலை மடத்தின் தூணில் ஒன்றுசரிந்ததால், மடம் முற்றாக சேதம் அடைந்துள்ளது. இதனால் பனிப்புலம், சில்லாலை சங்கானை மேற்கு பகுதியைச் சேர்ந்த மக்களது இறுதிச் சடங்குகளைச் சரிவர நிறைவேற்றமுடியாது கஷ்டத்துக்குள்ளாகின்றனர். மழை, வெய்யில் போன்றவற்றுக்கு ஒதுங்க இடம் இல்லாமல் உள்ளது. புதிய மண்டபம் கட்ட சுமார் இருபதினாயிரம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இவ்இடத்தில் அமைந்துள்ள சுடலையில் சடலங்களை தகனம் செய்வதை பலர் விசேடமாகவிரும்புவதுஉண்டு. சங்கமித்திரை வந்து இறங்கிய இடம் என்றும் வெள்ளரசு மரம் கொண்டுவந்து தங்கிய இடம் என்றும் இதுபெருமை மிக்கது.

## ரூபவாஹினியில் "எங்க ஊர் ராஜா"

[கொழும்பு]

ரூபவாஹினி தொலைக் காட்சியில் இன்று புதன் கிழமை இரவு ''எங்க ஊர் ராஜா'' தமிழ்ப்படம் ஒளிபரப்பப்படவுள்ளது. வெ)

## ஜெனரேட்டர்கள் விற்பனை

### 1,78,000ரூ. வருமானம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 6 ஜெனரேட்டர்களை ஏலத்தில் விற்பனை செய்ததன்மூலம் மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒரு லட்சத்து 78 ஆயிரம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற இந்த ஏல விற்பனையில் மன்னார் பட்டின உப அலுவலகத்தில் இருந்த 4 ஜெனரேட்டர்களும் பேசாலை உப அலுவலகத்தில் இருந்து 2 ஜெனரேட்டர்களும் விற்பனை செய்யப்பட்டன.

## பிரதமகுரு சுகவீனம்

(நல்லூர்)

நல்லூர் கந்தசாமி கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ குமார சுவாமிக் குருக்கள் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டு உள்ளார். அடியார்களும், பக்தர்களும் அன்றாடம் அவரைச் சென்று பார்த்துச் சுகம் விசாரித்துவருகின்றனர்.

## வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் [சி. எல். எஸ்.] அண்மையில் தனது 150வது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடியது.

இதனையொட்டி சங்கம் அதன் பிரபல எழுத்தாளர்களுக்கு வெள்ளிப்பதக்கம் வழங்கி கௌரவித்தது.

இலங்கையைச்சேர்ந்த முன்னாள் பிஷப் குலேந்திரனும் வெள்ளிப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்களில் ஒருவராவர். இவர் எழுதிய பதினொரு நூல்களில் பெரும்பாலானவை சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தினாலேயே வெளியிடப்பட்டவை.

முன்னாள் பிஷப் குலேந்திரனுக்குப் பதிலாக அவரின் பேரன் திரு. பி. இரத்தினராஜா சென்னையில் பதக்கத்தை பெற்றுக்கொண்டார். [வெ]


# உறைய

## வைக்க உற்ற துணை பிலிப்ஸ்



நேர் நிலை உறை பெட்டி
11 கன அடி ஏஎவ்பீ 122 ரூ. 23,000/- 475 டொலர்

| இரட்டைக் கதவு | தீர்வையுடன் | தீர்வையின்றி |
|---|---|---|
| 9.5 கன அடி ஏஆர்பீ 466 | 20,500 | 425 டொலர் |
| 11 கன அடி ஏஆர்பீ 467 | 22,300 | 460 டொலர் |
| 14 5 கன அடி ஏஆர்பீ 464 | 28,000 | 575 டொலர் |

| | குளிர்ப் பெட்டி ஒற்றைககதவு | | | | | உறை பெட்டகம் | |
|---|---|---|---|---|---|---|---|
| விலைகள் | 5 கன அடி | 6.5 கன அடி | 8 கன அடி | 9.5 கன அடி | 12 கன அடி | 9.6 கன அடி | 14.5 கன அடி |
| ரூ. | 11575 | 14550 | 16900 | 18390 | 21000 | 23600 | 29500 |
| அமெரிக்க டொலா | 225 | 295 | 345 | 375 | 430 | 420 | 520 |

பிலிப்ஸ் ஒற்றைக்கதவு/இரட்டைக்கதவு குளிர்ப் பெடடிகள், கட்டி படியாத உறை பெட்டகங்களின் தனிச் சிறப்பம்சங்கள் இதோ!
அழகிய மென் பச்சை நிறங்களில் தற்போது கிடைக்கும.

- உன்னத குளிர் விநியோகம் தரும் உட்புற அலுமீனிய வரியமைப்பு.
- உஷ்ண வலயத்துக்கேற்ற கொம்ப்றெசர் கருவி (5 வருட உத்தரவாதம்)

சுலபமான தவணைக் கட்டண வசதியுண்டு

ஏக பிரதிநிதிகள்:

HAYLEYS

ஹேய்லீஸ் லிமிட்டெட்.

காட்சிச்சாலை: 646, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 86958
சேவைப் பிரிவு: 25, வொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181-9
மேலும் கிடைக்குமிடம்: தரைத் தளம், கடை எண் 2, தீர்வையற்ற விற்பனை வலயம், கொழும்பு 3

PHILIPS

நாங்கள் பிலிப்ஸ் நிறுவனத்தோடு ஒன்றிணைந்து சிறந்ததையே உங்களுக்கு வழங்குவோம்.

## "சகல அரசியல் கட்சிகளும் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வழிவகுக்க வேண்டும்!"

[புலோலி]

"சகல அரசியல் கட்சிகளும் சமூக ஸ்தாபனங்களும் மாநில அமைப்புமுறையைச் செயற்படுத்தத் தங்களாலான சகல முயற்சிகளையும் செய்து பிரச்னைக்குத் தீர்வுகாண வழிவகுக்கவேண்டும்"

இவ்வாறு, சமூக ஜனநாயக இயக்கக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய அதன் பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி எம். சிவகுருநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

50 வருடங்களாக தமிழ் மக்களின் இரத்தத்தைச் சிந்தவைத்த இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் இந்நேரத்தில முன்னாள் கல்வியமைச்சர் பதியுதீன் முஹம்மத் போன்ற பெரியாரின் கிழக்கு மாகாணத்தை வடக்கு மாகாணத்துடன் இணைக்கக்கூடாது என்ற கருத்தும, இதுசம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென்று கோரும் கோரிக்கைகளும் இப்பிரச்னையை திசைதிருப்பிவிடாதா? என்ற அச்சம் நாட்டுநலனில் அக்கறையுள்ளவர்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் தோன்றியுள்ளது. உண்மையில் இத்தகைய பிரச்னை உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் விசுவாசமான கருத்தாக இருந்தாலும், இச் சந்தர்ப்பத்தைப் பாவித்து முஸ்லிம்களுக்கு சில அரசியல், சமூக ஸ்தாபனங்களுக்கு மாநிலஅமைப்பு முறையில் விருப்பமில்லை. பதிலாக ஐக்கிய இலங்கையையே விரும்புகிறார்கள் என்ற சாட்டைச் சொல்லி எரிகின்ற இனவாதத்திற்கு மேலும் எண்ணெய் ஊற்றுவதற்கென ஒரு பெரிய கூட்டமே கழுகுப் பார்வையுடன் இருக்கின்றதென்பதை மறந்துவிடக்கூடாது என்றார்.

## சாரதா ஆச்சிரமத்தில் கிறிஸ்மஸ்

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திலே இம்மாதம் 24-ந்திகதி "கிறிஸ்மஸ் ஈவ்" கொண்டாடப்படவுள்ளது.

சுவாமி சித்ருபானந்தா தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்திலே பருத்தித்துறை மெதஸ்டிஸ்த ஆலயமுகாமைக் குழு வணக்கத்திற்குரிய திரு. எஸ். எஸ். கருணைராஜன் அவர்கள் "யேசுபெருமானின் வாழ்க்கை" பற்றிச் சிறப்புரையாற்றுவார். மெதடிஸ்த தேவாலய சங்கீத பிரிவினரின் பக்திப்பாடல்களும் இடம் பெறவுள்ளன.

இருப்பெடுத்தலுக்கான

மலிவு விற்பனை

சகல மின்சார உபகரணங்களும்

விலை 5-00 ரூபா முதல் 8268-00 வரை

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24291

## கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு, மன்னார் பட்டின உப அலுவலகத்தினால் கிடைக்கும் வருமானத்தில் 15 வீதத்தையாவது மன்னார் பட்டின அபிவிருத்திக்குச் செலவிடவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை மன்னார் கிராமோதய சபைத் தலைவர் திரு. எம். சர்க்கரியாஸ் மன்னார் பிரதேச சபையினூடாக மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## ரயில் பிரயாணிகள் சிரமம்

(மன்னார்)

பேசாலை ரயில்நிலைய மேடையில் குண்டு, குழிகள் நிறைந்திருப்பதால் ரயில் ஏறி, இறங்கும் பிரயாணிகள் பல சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

பேசாலை பிரதான வீதியிலிருந்து பேசாலை ரயில் நிலையத்திற்கு வரும் வீதியிலும் குண்டும், குழிகளும் நிறைந்துள்ளதால் பேசாலை ரயில் நிலையத்தில் பொதிகளை ஒப்படைப்பதற்கும், ரயில் நிலையத்தில் பொதிகளை எடுத்துச் செல்வதற்கும்வாகனங்களைக்கொண்டு வரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

## "நல்ல சேவையாளராக விளங்கினர்"

[சுழிபுரம்]

"கீழ்ப்படிவும், ஒழுக்கமும், சிறந்த பண்பாடும் நிறைந்தவராகவும், எவ்வித பெருமையும் இல்லாமல் பார்த்த உத்தியோகத்திற்கு மேலாகப் பல பொதுப்பணிகளில் நல்ல சேவையாளராக விளங்கி எங்கள் யாவரதும் பாராட்டையும், மதிப்பையும் பெற்ற ஒருவராக விளங்குபவர்தான் திரு. கிருஷ்ணர். இவர் எங்கள் கல்லூரியில் நாற்பது வருடங்களாக அலுவலக உதவியாளராகப் பணியாற்றி ஓய்வுபெறுகிறார். "இவ்வாறு இவரின் பிரிவுபசார விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபர் திரு. கே. அருணாசலம் குறிப்பிட்டார்.

கல்லூரி மண்டபத்தில் பிரிவுபசாரம் நடைபெற்றது. இவ்வைபவத்தை அதிபர், பாடசாலை அபிவிருத்திசபை. ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். பாராட்டுப்பத்திரமும், வெகுமதிப் பரிசில்களும் வழங்கப்பட்டன. பலர் பாராட்டுரை வழங்கினர். திரு. கிருஷ்ணர் தமக்களித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

ஆஷா

ரெராஸோ





* ஆஷாரெராஸோ (கற்கள் தரை ஓடுகள்) உயர்ந்த தரத்தில் உற்பத்திசெய்யப்பட்டவை. அழகிற்கும் நீண்ட பாவிப்பிற்கும் உறுதியளிக்கும் வகையில் அழுத்தமாகத் தயாரிக்கப்பட்டவை.
* பரபரப்பூட்டும் பல வர்ணங்களிலும், கண்கவர் டிசைன்களிலும் உருவாக்கப்பட்ட ஆஷா ரெராஸோ, உங்கள் தரைக்கு புத்தம் புதியதோர் (ஒளியைத்) அமைப்பைத் தருகிறது.
* 12 வர்ணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கலாம். எத்தனை ரம்யம், எத்தனை எழில். அது மட்டுமா நடைமுறைக்குகந்தது.. ஆஷா ரெராஸா.

விலை: ரூபா 17/50 சதத்திற்கு மேல்.

திருப்தியடைந்த எமது சில வாடிக்கையாளர்கள்
தாஜ்லங்கா ஹோட்டல்ஸ் லிமிடேட், ரிரான்ஸ் ஆசியா ஹொட்டல் (போக்குவரத்து நிலையம்)
வர்த்தகவங்கி-கண்டி, மத்திய ஆஸ்பத்திரி.

உற்பத்திசெய்வோர்:

ஆ ஆஷா டைல்ஸ்

150, வோர்ட் பிளேஸ், கொழும்பு -8. தொலைபேசி: 597610, 597952,

விபரங்களுக்கு :-

தேவின்சா என்டர்பிறைசஸ் "யோகமாளிகை" வல்லை ரோட், சங்கானை, யாழ்ப்பாணம்.

ஆஷா ரெராஸோ - பல ரகங்களில் மிகச்சிறந்தது

TEAM

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
நாகேஷ் - விஜயா
**சர்வர் சுந்தரம்**

**மனோகரா** (யாழ். நகர்)
10-30 a.m. 2-15, 4-45, 7-15 p.m.
Bill Murray in
**Meat Balls**
(Comedy Film-Color)

**ஹரன்** (யாழ். நகர்)
விரைவில் வருகிறது
CHARLES BRONSON
LEE MARVIN in
**"Death Hunt"**
(Color)
இரண்டு எதிரி குழுவின ருக்கிடையில் ஏற்படும் பயங்கர துப்பாக்கிச் சமரின் முடிவு?

**Regal** (Jaffna)
Daily 10-30 a m. 2-30
4-45 and 7-00 p. m.
Ringo Star in
**CAVE Man**
(Action-Color-Thrill
A Family Entertainment

**Rajah** JAFFNA
Daily 10-30 2-00 4-30
6-30 and 8-30
Jackie Chan in His First American Spectacular
**BATTLE CREEK BRAWL**
(Color Scope)
An adventures Action Packed Karate Film which you would have ever seen before
குறிப்பிட்ட தினங்களுக்கு மட்டும்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**IRON MAN**
ACTION THIRILL

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-சௌகார்ஜானகி
**பார் மகளே பார்**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
தென்னகத் திரைவானில் தேன்சிந்தும் அமுத ராகமாய், காதலின் அமர காவியமாய் பார்ப்பவரைப் பரவசமூட்டி - மீண்டும் பார்க்கத்தூண்டும் - சிந்திக்க வைக்கும் - அதி உன்னத காதல் ஓவியமாய் பவனி வந்த வண்ணத்திரை விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**சாந்தி** (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30
மாதர்கள் பெரிதும் பாராட்டும் உன்னத வண்ணச்சித்திரம்!
சிவாஜி - கே.ஆர். விஜயா
**ஊரும் உறவும்**
இன்னும் குறிப்பிட்ட சில தினங்களே காண்பிக்கப்படும்!


## ஹோமியோபதி பரீட்சையில் சித்தி



(யாழ்ப்பாணம்)

டாக்டர் செல்வி விநாசித்தம்பி நிர்மலாதேவி சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட வைத்தியசபை உறுப்பினர்களால் நடாத்தப்பட்ட 'ஹோமியோபதி' வைத்தியப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இப்பரீட்சையில் மூன்று பெண்கள் மட்டுமே சித்தியடைந்தனர். அவர்களில் டாக்டர் விநாசித்தம்பி நிர்மலாதேவி ஒருவரே தமிழ்ப் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் செல்வி விநாசித்தம்பி நிர்மலாதேவி, யாழ். தேசிய ஹோமியோபதி ஸ்தாபன உதவிச் செயலாளர், வட இலங்கை ஹோமியோபதி உப செயலாளர் ஆகிய பதவிகளுடன் ஹானமன் வைத்தியக் கல்லூரி விரிவுரையாளராகவுமிருந்து பணியாற்றியுள்ளார். சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சீ. விநாசித்தம்பி தம்பதிகளின் புதல்வியாவார். (கி)


**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்-ஸ்ரீவித்யா
**அபூர்வ ராகங்கள்**


## "பொதுஸ்தாபனங்கள் சட்டதிட்டத்திற்கமைய இயங்கவேண்டும்!"

### — யாழ். அரசாங்க அதிபர்

(வண்ணார்பண்ணை)

"பொறுப்பு வாய்ந்த கடமைகளைச் செய்யும் மக்கள் ஸ்தாபனங்கள் சட்டதிட்டத்திற்கமைவாகவும், ஜனநாயக முறைப்படி இயங்குவது மிக முக்கியமானதொன்றாகும். இந்தவகையில் இயங்கும் ஸ்தாபனங்களே சரியான முறையில் மக்களுக்குப் பணியாற்றமுடியும்."

இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, காரைநகர் நல்லொழுக்க வாலிபர் சங்க சம்மேளனத்தின் விசேட கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். காரைநகர் குலோப் நூல்நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இச்சம்மேளனக் கூட்டத்திற்குச் சம்மேளனத் தலைவர் திரு. ஏ. அரியரத்தினம் தலைமைதாங்கினார்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுதலின்பேரில் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் வாலிபர் சங்கங்களின் பிரதிநிதிகள் அதிகமாகக் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் தொடர்ந்து பேசுகையில், "எந்த ஒரு பொது ஸ்தாபனங்களும் தமக்கென ஒரு அமைப்புவிதியை வைத்து இயங்காவிடில் அது கடிவாளம் இல்லாத குதிரைக்குச் சமமாகிவிடும். இது மட்டுமல்ல பொதுமக்களின் நல்லபிப்பிராயத்தைப் பெறுவதற்கு ஏற்ப ஜனநாயக முறைப்படி நடக்க முயலவும் வேண்டும்" என்றார்.

இச்சம்மேளனத்தின் தலைவர் திரு வி. றட்டாய் பேசுகையில், இச்சம்மேளனத்திற்குக் கிடைக்கப்பெற்ற உலக நன்கொடைகள்பற்றிய விபரங்கள் தெளிவாக காட்டப்படவில்லை என்றார்.

## கயரோக நிவாரண சங்க வடமராட்சிக் கிளை பொதுக்கூட்டம்

(புலோலி)

இலங்கை கயரோக தேசிய நிவாரணசங்க வடமராட்சிக் கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 21ம் திகதி சங்கத் தலைவர் திரு ஆ. க. மாணிக்கம் தலைமையில் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரீ யோகநாதன், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம், பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## மாணவ முதல்வர்களின் பங்களிப்பு

[சுழிபுரம்]

"மாணவர்கள் பாடசாலைக்கு வருவதன் நோக்கம் கல்வியைப் பெறுதல் கல்வியின் தரம் சிறப்பாக முதல் அமையவேண்டும். பாரம்பரிய ஒழுங்குமுறையொன்று இருந்துவந்தாலும் இன்று எமது மாணவ சமூகம் விரக்தியுடனும் யாது செய்வது என்பது தெரியாதும் அவதியுறுகின்றனர். மாணவர்கள் கல்வியைக் கற்கும் காலத்தை தக்கவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். கல்வி சிறப்பாக அமைய மாணவ முதல்வர்கள் பணி இன்றியமையாததாகும். ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்கும் கல்லூரியில் பணியாற்றும் மாணவ முதல்வர்கள் யாவருக்கும் முன்னோடிகளாகவிளங்கவேண்டும்

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மாணவ முதல்வர் தேநீர் விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய கல்லூரி அதிபர் திரு க. அருணாசலம் குறிப்பிட்டார் மாணவ தலைவர் அ. மகாலிங்கசிவம் தலைமையில் தேநீர்விருந்து நடைபெற்றது கல்லூரி நூல்நிலைய மண்டபத்தில் வைபவம் நடைபெற்றது

## ரூபவாஹினியில் இன்று

மாலை:

6-02 'பிக்புளுமாபின்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 சிங்களச் சித்திரம்
7-00 செய்திகள் (தமிழ்)
7-15 சிங்கள நிகழ்ச்சி
7-45 'லக்ஸ்பிறே' - கிரிக்கெட் பந்தய போட்டிகளிலிருந்து விசேட அம்சங்கள்.
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 'திமுத்துமுத்து' - சிங்கள நாடகம்
9-15 தமிழ்த்திரைப் படம் 'எங்க ஊர் ராஜா'
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 தமிழ்திரைப்பட தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

## சாயிபாபா சமித்தியிலும் கிறிஸ்மஸ்

[புலோலி]

பருத்தித்துறை - மந்திகை பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா சேவா சமிதியியில் இம்மாதம் 25ம் திகதி "கிறிஸ்மஸ் விழா" கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் சமித்தியில் விசேட பூசைகளும் ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

## இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சி

[மன்னார்]

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் இளைஞர் கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் 8 யுவதிகளுக்கு 1984-ஆம் ஆண்டில் நிலாவெளிப் பயிற்சி நிலையத்தில் தையல், பற்றிக், வீட்டுப்பணி ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படும்.

இத்துடன் இளைஞர் கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் 10 இளைஞர்களுக்கு விவசாயத்திலும், 4 இளைஞர்களுக்குத் தச்சு வேலையிலும், 4 இளைஞர்களுக்கு மேசன் வேலையிலும் பயிற்சியளிக்கப்படும்.

இப்பயிற்சிகள் யாவும் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது

தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஜனாப் ஏ. சீ. ஏ. கபூர் கேட்டுள்ளார்

## அகதிகளுக்குத் துணிவகைகள்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ள அகதிகள் குடும்பங்களுக்கு பாகிஸ்தான் அரசினால் வழங்கப்பட்ட துணிவகைகள் வழங்கப்பட்டன ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஒரு சேலை, படுக்கை விரிப்பு சிறுவர் உடைகள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன


# பாட்டா பாதணிகள்
# மலிவு விற்பனை
விலை ரூபா 20-90 முதல் 259-90 வரை
**எஸ்.சின்னத்துரை அன் பிறதர்**
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சகல மரத்தளபாடங்களும்
# மலிவு விற்பனை
விலை ரூபா 240-00 முதல் 7200/-வரை
**டில்கா பேணிச்சர் பலெஸ்**
234-236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24186

★ பன்முகப்படுத்தப்பட்ட பட்ஜட் நிதியிலிருந்து

# யாழ். மாநகரசபை பகுதிக்கு நிதி ஒதுக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபைப்பகுதி அபிவிருத்திக்கும் நிதி துஒதுக்கப்படவேண்டும் என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சீ.வீ. கே. சிவஞானம் கோரியுள்ளார்.

உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு செயலாளர் திரு. பாஸ்கரலிங்கத்திற்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், கடந்தகாலத்தில், பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் யாழ். மாநகர சபை புறநீக்கலாக இருந்ததென்றும், கிராமசபை, பட்டின சபை அபிவிருத்திகளுக்கு செலவிடுவது போல் யாழ் மாநகரசபை அபிவிருத்திக்கும் செலவிடப்படவேண்டும் என்றும் கோரியுள்ளார்.

பிரதமர் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திற்கு மேலதிகமாக 25 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளாரென்றும், ஆதலால் யாழ். மாநகரசபை அபிவிருத்திக்கும் இதில் பணம் ஒதுக்கப்படவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (க)

## பொலிசார் இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து அடுத்த மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்ட இன்ஸ்பெக்டர் கே. முத்துத்தம்பி, சார்ஜன்ட்டுகள் கே. தில்லைத்துரை, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் முறையே காலி, நுவரெலியா, களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டிருந்தனர். [மா]

## மட்டக்களப்பிலும் பாதுகாப்பு இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையங்களில் ஆயுதப்படையினரின் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றும் நேற்று காணப்படவில்லை,

விமானப்படையினரும் பொலிஸாரும், வினாத் தாள்களைக் கொண்டு செல்லும் ஏற்பாட்டை செய்திருந்தனர்.

இராணுவத்தினர் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளை மட்டும் கவனித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 48 பரீட்சை நிலையங்களில் 11,500 மாணவர்கள் நேற்று ஜி. சி. [சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றினார்கள் எட்டு இணைப்பு நிலையங்கள் செயல் பட்டன. [க]

## அகதிகள் முகாம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து அச்சிறுமியை மீட்டு வந்து முகாமில் பெற்றோரிடம் ஒப்படைத்திருந்தனராம்.

ஆனாலும் மறுநாள் பிள்ளைக்காகப் பணம் கொடுத்தவர்கள் மீண்டும் அந்த முகாமிற்குவந்து அங்குள்ள ஊழியர் ஒருவரின் உதவியுடன் அப்பிள்ளையின் பதினொரு வயது சகோதரியை அதிகாலை படுக்கையில் நித்திரையாக இருந்த சமயம் கூட்டிச்சென்றதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது

முதலில் நல்லூர் வீட்டுக்குச் சென்ற 9 வயதுப்பிள்ளை மீண்டும் அங்கு செல்லவிரும்பாததினால்தான் அவளின் 11 வயது சகோதரி அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறது-

இதுபற்றி யாழ். அரசாங்க அதிபருக்கு புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் பூரண விசாரணை செய்யுமாறு பணித்திருந்தார்.

சட்டத்துக்குமாறாக முகாமில் பராமரிக்கப்பட்டிருந்த பிள்ளையை வெளியாருக்கு விற்பனை செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும். அரசாங்க அதிபர் பணித்துள்ளதுடன் அப்பிள்ளையை உடனடியாகப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறும் தெரிவித்துள்ளார். (மா)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சின்னத்தம்பி

பருத்தித்துறை காணிப்பதிவுக் கந்தோர் முன்னாள் அதிபராகக் கடமையாற்றிய, குரும்பசிட்டி தம்பிப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் காலமானார். இவர் செங்கையம்மாவின் அன்புக் கணவரும், ரவிகுமார், சுனேத்திரா, ஆகியோரின் அன்புத் தந்தையும், ஏ.ரி. பொன்னுத்துரை, வை. செல்லம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார். ஈமைக்கிரியை 21-12-83 புதன் கிழமை பகல் 12 மணியளவில் குரும்பசிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

10675

## யாழ். ஆஸ்பத்திரியில் அனாதரவாகவிடப்பட்ட சிறுமி!

(நல்லூர்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சை பிரிவில் அனாதரவாக விடப்பட்ட சிறுமியின் பெற்றோரைத் தேடிக்கண்டு பிடிக்கப் பொலிசார் எடுத்த முயற்சிகள் இன்னும் பலிக்கவில்லை. வாய் பேசாத இச்சிறுமி, இவரைக் குணமாக்கப் பெற்றோர் பல டாக்டர்களிடம் காட்டி சிகிச்சை செய்தும் பலனளிக்கவில்லை; இந்த நிலையிலே வேறு வழியின்றி இங்கு விட்டுச் செல்கின்றோம்' என்ற சாரப்பட எழுதிய கடிதம் ஒன்றும் இச்சிறுமியின் வசம் காணப்பட்டது.

பேராசிரியர் கு. நேசையாவுக்கு விலாசமிடப்பட்ட இக்கடிதத்தில் இச்சிறுமியின் எதிர்கால வாழ்வுக்கு வழிசெய்யுமாறு அன்னாரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் பேசவோ, நடக்கவோ இயலாத நிலையில் காணப்பட்ட சிறுமியை ஆஸ்பத்திரி நிர்வாகம் தற்காலிகமாகப் பராமரிக்க ஒழுங்குகளைச் செய்துள்ளது

## ஈழம்பற்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றிருந்தபோது சேத்தவன புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்துக்கும் விஜயம் செய்திருந்தார்.

இங்கு நடைபெற்ற வைபவமொன்றில் தொல்பொருள் ஆராய்ச்சி ஆணையாளர் டாக்டர் ரோலண்ட் சில்வாவிடம், இலங்கைக்கு ஈழம் எனும் பெயர் எப்படி வந்தது என்று ஜனாதிபதி கேட்டபோது டாக்டர் சில்வா, ''இலங்கைக்கு எழுபத்துநான்கு பெயர்கள் உண்டு. அதில் ஈழம் என்ற பெயரும் இலங்கைக்கு உண்டு'' என்று பதிலளித்தார்.

## நீதிமன்றம் விடுமுறைக்கு மூடப்பட்டது

(மாவிட்டபுரம்)

மல்லாகம் நீதிமன்றம் விடுமுறைக்காக கடந்த 17ம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றம் விடுமுறைக்காக மூடப்பட்டு அடுத்தமாதம் 3ம் திகதி மீண்டும் திறக்கப்படவிருக்கிறது.

## மரண அறிவித்தல்



### கனகரெட்ணம் அன்ரன் ஹோர்ச் (ரஜனி)

மலர்வு: 26-06-1960 உதிர்வு: 19-12-1983

முன்னாள் முல்லைத்தீவு பொபி ஸ்டுடியோ, யாழ். சித்திராலயா ஸ்டுடியோ படப்பிடிப்பாளர் அன்ரன் ஜோர்ச்அவர்கள் அகால மரணமானார். அன்னாரின் பூதவுடல் 21-12-83 மாலை 4 மணிக்கு 12, புனித செபஸ்ரியார் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

12, புனித செபஸ்ரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
உம்பிரிவால் வாடும்,
பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்

(10682)

## அடுத்த மாநாட்டுக்கான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டுள்ள ஒன்பது கட்சிகளில் எட்டு கட்சிகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

உத்தேச மாநாட்டை எங்கே எப்போது நடத்துவது என்பது குறித்தும் எந்தெந்த கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பது என்பது குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (கு)

## மட்டுநகரில் சூறுவளி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக 45 மைல் வேகத்தில் வீசும் காற்று, தாழ் அமுக்கம் கரையை அடைந்ததும் அதிகரிக்கும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

அநுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. பி.கே. தசநாயக்காவும் நிலைமையை சமாளிக்கத் தயாராக இருக்குமாறு சகல ஸ்தாபனங்களையும் கேட்டுள்ளார். இதே வேளை யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நேற்று பிற்பகலில் இருந்து பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்தது. (கு)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49,Telephone: 22389 — 24126.